# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 29 செவ்வாய்க்கிழமை (13.03.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 107


# வடக்கு - கிழக்கை மீண்டும் இணைத்துப் பிராந்திய சபை;

# முஸ்லிம்கள், மலையகத் தமிழருக்கு தனித்தனி உபபிராந்திய சபைகள்

## இ.தொ.காங்கிரஸின் தீர்வுத்திட்ட யோசனை

கொழும்பு,மார்ச் 13

**வடக்கு - கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்பட்டு ஒரு பிராந்திய சபை நிறுவப்படவேண்டும். அதில் முஸ்லிம் மக்களுக்கென உபபிராந்திய சபை அமைக்கப்படவேண்டும். மலையகத் தமிழ் மக்களுக்கெனவும் தனியான பிராந்திய சபை அமைக்கப்படவேண்டும்.**

இலங்கைத் தொழிலளர் காங்கிரஸின் இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனையில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. இ.தொ.காவின் உபதலைவர் இரா.யோகராஜன் இதனைத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு நிர்வாக அதிகாரங்களுடைய பிராந்திய சபைகள் நிறுவப்படவேண்டும் என்பது இ.தொ.காவின் தீர்வு யோசனையின் முக்கிய அம்சமாகும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இ.தொ.காவின் ஆலோசனைகள் உள்ளடக்கப்பட்ட திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இ.தொ.கா. தலைவரும் பொதுச்செயலாளருமான ஆறுமுகம் தொண்டமானின் தலைமையில் இ.தொ.கா. நாடாளுமன்ற உறுப்பினர்கள், மலையக புத்திஜீவிகள், சட்டத்தரணிகள் மற்றும் இ.தொ.கா. உயர்மட்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய குழுவினர் இத்தீர்வுத் திட்டத்தை தயாரித்துள்ளனர் எனவும் யோகராஜன் கூறினார்.

இத்தீர்வுத் திட்டத்தில் பாரம்பரிய கலாசாரம், மொழி, பூகோள அடிப்படை என்பனவற்றிக்கான உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும்என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இ.தொ.கா. தயாரித்துள்ள தீர்வுத்திட்டத்

(03ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் மோதல்

முகமாலையில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் விடுதலைப்புலிகள் மூவர் கொல்லப்பட்டனர் என்றும் பின்னர் அந்தப் பகுதியில் நடத்திய தேடுதலின் போது 15 கிலோகிராம் நிறையுடைய கிளைமோர் குண்டு ஒன்றும் குண்டை இயங்கச் செய்யும் தன்னியக்கக் கருவிகளும் கண்டெடுக்கப்பட்டன எனவும் தேசிய பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் புலிகள் தங்களது பாதுகாப்புக் காவலரண்மீது தாக்குதலை மேற்கொண்டனர் எனவும் படையினர் பதில் தாக்குதல் மேற்கொண்டு அதனை முறியடித்தனர் என்றும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது. (ஐ-4)

## மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோருக்கு அவசிய நிவாரண உதவிகளைச் செய்வதில் கஷ்டம்

### ஏனைய அமைப்புகளையும் உதவுமாறு ஐ.சி.ஆர்.சி. கோரிக்கை

மட்டக்களப்பு,மார்ச்13

கடந்த மூன்று நாள்களில் மட்டும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இருந்து 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

அவர்களுக்கான தங்குமிட வசதிகளையும், உணவு, தண்ணீர் மற்றும் அவசர அத்தியாவசிய உதவிகளைச் செய்வதில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகிறது.

அதனால், ஏனைய உதவி வழங்கும் ஏஜென்சிகளையும் அகதிகளுக்கு உதவுமாறு செஞ்சிலுவைக்குழு அழைப்பு விடுத்திருக்கிறது. அண்மைக்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் ஒன்றரை லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என்று மதிப்பிடப்படுகிறது.

இதேவேளை -

மட்டக்களப்பு மாவட்டத்தில் துரித

(03ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தல், கைதுகள் குறித்து ஐ.நாவின் உடன்படிக்கைச் சபையில் முறையிட ஏற்பாடு

கொழும்பு,மார்ச்13

குடாநாட்டில் இடம்பெறும் கடத்தல்கள், கைதுகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உடன்படிக்கைச் சபையிடம் முறைப்பாடுகளைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

இவை குறித்த விவரங்களை உடனுக்குடன் திரட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் அறிவித்துள்ளார்.

அது தொடர்பாக விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாம் ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கைச் சபையில் முறைப்பாடுகளைச் செய்யவுள்ளோம்.

எனவே, காணாமற்போனவர்கள், கடத்தப்பட்டவர்கள் அல்லது கொலைசெய்யப்பட்டவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை அவர்களது குடும்ப உறுப்பினர்கள் அல்லது உறவினர்கள் எமக்கு உடனடி

(03ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு தாக்குதலை நிறுத்த அரசுக்கு அழுத்தம் கொடுக்கவும்

கொழும்பு, மார்ச்.13

மட்டக்களப்பில் மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதலை நிறுத்துமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இவ்வாறு பிரிட்டிஷ் தூதுவரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று பிரிட்

(04ஆம் பக்கம் பார்க்க)

## பத்திரிகை அச்சுத்தாள் எடுத்துவருவதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்படவேண்டும்

### அரச அதிபரிடம் மக்கள்குழு வற்புறுத்து

யாழ்ப்பாணம்,மார்ச்13

அச்சுத்தாள் எடுத்துவருவதற்கு பத்திரிகை நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையால், குடாநாட்டில் இருந்து வெளிவரும் நாளேடுகள் நிறுத்தப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதனை நீக்குவதற்கு, தடுப்பதற்கு உடனடியாக தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

இது விடயத்தை மக்களின் ஓர் அவசர பிரச்சினையாகக் கருதிச் செயற்படுவது அவசியம்.

இவ்வாறு சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவின் பிரதிநிதிகள் நேற்று அரசாங்க அதிபரிடம் வலியுறுத்தினர்.

குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து யாழ். அரச அதிபர் கே.கணேஷுக்கும் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

யாழ். ஆயர் இல்லத்தில் நேற்றுப்பிற்பகல் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, மக்கள் குழுத்தலைவர் பேராசிரியர் பொ.

(03 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் அத்தியாவசிய சேவைகளை சீராக்குவதற்கு விரைந்து நடவடிக்கைகள்

### யாழ்.செயலகக் கூட்டத்தில் பரிசீலனை

யாழ்ப்பாணம், மார்ச்.13

குடாநாட்டில் பொதுமக்களுக்கான அத்தியாவசிய சேவைகள் அனைத்தும் இயன்றவரை கூடிய விரைவில் சீரமைக்கப்படும். இதற்கென அனைத்துத் தரப்பினரும் தமது ஒத்துழைப்பையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு நேற்று யாழ்.செயலகத்தில் நடைபெற்ற அத்தியாவசிய சேவைகளை சீரமைப்பது தொடர்பான கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நேற்று முற்பகல் 11.30மணிக்கு ஆரம்பமான இந்தக்கூட்டம் சுமார் இரண்டு மணிநேரமாக நடைபெற்றது.

பிரதேச செயலர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், வணிகர் கழகப் பிரதிநிதிகள், கூட்டுறவுச் சங்கப்பிரதிநிதிகள் ஆகியோர் உட்படப் பலர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

குடாநாட்டில் பொதுமக்களின் தேவைகளை நிறைவுசெய்வதில் உள்ள தடங்கல்கள், கட்டுப்பாடுகள், பிரச்சினைகள் என்பன தொடர்பாக அரச அதி[illegible] சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் வி[illegible] ஆராய்ந்தார். அவற்றை நிவர்த்தி செய்வதற்குரிய ஏற்பாடுகள் குறித்தும் இந்தக் கூட்டத்தில் கலந்தாலோசனை செய்யப்பட்டது.

இந்தக்கூட்டத்தில் பரிசீலனைக்கு

(03 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் நிர்வாகச் செயற்பாடுகள் மிகவும் மோசமடைந்து வருகின்றன

### சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்கிறார் நீதிவான்

கரவெட்டி, மார்ச்.13

வடமராட்சியின் நிர்வாகச் செயற்பாடுகள் மிகவும் மோசமடைந்து வருகின்றன. இவற்றுக்கு அரசநிர்வாக அதிகாரிகளும், ப.நோ.கூ சங்க நிர்வாகிகளுமே காரணமானவர்கள்.

இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம்.

இந்த நிலையைப்போக்குவதற்கு கடும் நடவடிக்கை எடுக்கநேரிடும் என்றும் நீதிவான் தெரிவித்தார்.

பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்றுக்காலை நடந்த அவசர கூட்டம் ஒன்றிலேயே நீதிவான் இப்படி எச்சரிக்கை விடுத்தார்.

இக்கூட்டத்தில் அரச அதிகாரிகள், ப.நோ.கூ.சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அங்கு நீதிவான் சுட்டிக்காட்டிய விடயங்கள் வருமாறு:-

★ மோசடிகள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள் இந்தப் பிரதேசத்தில் தாராளமாக இடம்பெறுகின்றன. இனிமேலும் இவற்றை நீதிமன்றம் பார்த்துக்கொண்டிருக்கப் போவதில்லை. மக்கள் நன்மையடையத்தக்க

(04ஆம் பக்கம் பார்க்க)

## மகஸின் சிறைச்சாலைக் கைதிகள் தொடர்ந்து நேற்றும் உண்ணாவிரதம்

### 8 பேரின் நிலைமை கவலைக்கிடம்

கொழும்பு,மார்ச்13

42 தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் எதிர்பார்க்கப்பட்டதுபோன்று நேற்று கைவிடப்படவில்லை. வெலிக்கடை புதிய மகஸின் சிறைச்சாலையில் அவர்கள் நேற்றுத் திங்கட்கிழமை தொடர்ந்தும் உண்ணாவிரதம் இருந்தனர். இவர்களில் 36 பேர் சாகும் வரை உண்ணாவிரதமிருக்கின்றனர்.

அவர்களில்எட்டுப்பேரின்உடல்நிலைமை நேற்று மோசமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

வெலிக்கடை புதிய மகஸின் சிறைச்சாலையில் எட்டுப் பேரின் உடல்நிலைமை நேற்று மோசமடைந்ததாகத் தெரியவந்தது. மற்றும் பலரின் உடல்நிலைமை மோசமடைந்துள்ளது.

அவர்களின் அந்த உண்ணாவிரத நடவடிக்கையைத் தற்காலிகமாகவேனும் கைவிடச் செய்யும் முயற்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் அணி ஒன்று மீண்டும் இன்று சிறைச்சாலைக்குச் செல்கிறது. உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு தமிழ்க் கைதிகளை அக்குழு விநயமாக வேண்டிக்கொள்

(03 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனை நிகழ்வும் நன்றி நவிலலும்



அவனியில் 19 * 03 * 1985
அவனிடம் 11 * 02 * 2007

### செல்வன் பத்மகாந்தன் சஞ்ஸீத்

(பழைய மாணவன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
மாணவன் - SSM College of Engineering, Selam, India)

எமது அன்புச் செல்வம் பத்மகாந்தன் சஞ்ஸீத் அவர்கள் கடந்த 11.02.2007 அன்று இந்தியாவில் அகால மரணமாகிய செய்தி அறிந்ததும் எம்முடன் பல வழிகளிலும் தொடர்பு கொண்டு எம்துயர் பகிர்ந்த அனைவருக்கும் எம் நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (13.03.2007) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் நினைவுப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. க.பத்மகாந்தன்
(பிரதி அதிபர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)
குடும்பத்தினர்.

'புனித வாசா'
மீசாலை கிழக்கு, மீசாலை. (58736)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



தோற்றம் 18 . 04 . 1945
மறைவு 12 . 02 . 2007

### திருமதி சரஸ்வதி தெட்சணாமூர்த்தி

கடந்த 12.02.2007 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி சரஸ்வதி தெட்சணமூர்த்தி அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு நாளை (14.03.2007) புதன்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

பத்மவாசம்,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர். (58649)

தகவல்:
கணவர், மகள், மருமகன்,
சகோதர, சகோதரிகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 12 . 07 . 1965
உதிர்வு 21 . 02 . 2006

### அமரர் கி.சிறீமுருகன்

திதி : நவமி

வாழ வழியும் காட்டினீர் எங்கள் மாமாவே!
வலுவிழந்து நிற்கின்றோம் நாங்கள் மாமாவே!
வாழ்விழந்து ஓராண்டு சென்றது மாமாவே!
ஓராயிரம் நினைவுகளுடன் நாங்கள் மாமாவே!

இன்று (13.03.2007) செவ்வாய்க்கிழமை 12 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தூப்புலம்,
இமையாணன் மேற்கு,
ஆதியாமலை, உடுப்பிட்டி. (58705)

தகவல்:
குடும்பத்தினர்,
விஜய் (பெறாமகன்).

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

### அமரர் பாக்கியம் பொன்னையா

தோற்றம் : 18.12.1921 மறைவு : 12.02.2007

அல்வாய் வட மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் அன்புத் தாயார் திருமதி பாக்கியம் பொன்னையா அவர்கள் கடந்த 12.02.2007 திங்கட்கிழமையன்று காலமான செய்திகேட்டு நேரில் வருகை தந்தோருக்கும் தொலைபேசி, தந்தி, தபால் மூலம் அனுதாபம் ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை (14.03.2007) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அழைப்பிதழ் கிடைக்காதவர்கள் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி க.தவமணிதேவி
(ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர் - மகள்),
பொ.கணேசலிங்கம்
(ஓய்வுபெற்ற இலங்கை ஹோட்டல் கூட்டுத்தாபன முகாமையாளர் - மருமகன்)

'உதய தாரகை', துளாயிற் பிள்ளையார் கோயிலடி,
அல்வாய் வட மேற்கு, அல்வாய்.
(58676)

## வீடு வாடகைக்கு

ஒட்டுமடம், மானிப்பாய் வீதியில் உள்ள வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு 077 6112056 (58745)

## தவறிவிட்டது

மூளாய் வீதி, வட்டுக்கோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த சிவகுருநாதர் - கனகசபாபதி என்பவரது தேசிய அ.அட்டை (401731113V) கறுப்பு நிறக் கவருடன் 04.03.2007 அன்று வில்லூன்றி அந்தியேட்டி மடத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியிலோ அல்லது கி. இராமச்சந்திரா, உதயன் பணிமனையிலோ ஒப்படைக்கவும். (58755)

## ஒத்துமாறல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்திற்கு அனுமதி கிடைத்த மாணவி மட்டக்களப்பு பல்கலைக்கழகத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார்.
தொடர்பு :- ப.சதாசிவம்,
271/1, மன்னார் வீதி, வவுனியா.
தொ.பே: 060 2242099 (58737)

## மணமகள் தேவை

கனடாவில் தொழில் புரியும் பிரஜாவுரிமை பெற்ற யாழ்.இந்து கௌரவ குடும்பம், அவிட்ட நட்சத்திரம், செவ்வாய் குற்றமற்ற, பாவக்கிரகம் 14 ½, 42 வயதுடைய விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு படித்த, பண்பான, அழகான மணமகள் தேவை. விதவைகளும் ஜாதகக் குறிப்பு, முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு விளம்பர இல. 2955
மே/பா. உதயன். (59248)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரஸ்வதி கனகரட்ணம்

(இளைப்பாறிய உதவி அதிபர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)



கோப்பாய் வடக்கைப் வசிப்பிடமாகவும் பிறப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கனரட்ணம் 11.03.2007 ஞாயிற்றுக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி - செல்லம்மா தம்பதியரின் ஏகபுதல்வியும் காலஞ்சென்ற மூத்ததம்பி மற்றும் இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் மூ.கனகரட்ணம்(பிரதி திட்டமிடல் பணிப்பாளர்) அவர்களின் அன்பு மனைவியும் இளங்கோவன்(லண்டன்), வரதன் (கொழும்பு), அரவிந்தன் ஆகியோரின் பாசமிகு தாயும் சண்முகராஜா (ஓய்வு பெற்ற தேயிலை ஆராய்ச்சி நிலைய பிரதித் திட்டப் பணிப்பாளர், தலவாக்கொல்லை) அவர்களின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2007) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மூ.கனகரட்ணம்(கணவர்)
பிராமனோடை, கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

### திருமதி வேலுப்பிள்ளை கண்மணியம்மா



வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கண்மணியம்மா 09.03.2007 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற Dr.வேலுப்பிள்ளையின்(R.M.P) அருமை மனைவியும் அருணாசலம், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் சிவஞானரட்ணம், திருமதி இராஜவல்லவன் மனோரஞ்சிதமலர், சிவஞானச்செல்வம், தில்லையம்பலம், சிவானந்தகணேசன் ஆகியோரின் அருமைத் தாயாரும் நாகரத்தினம், கோகிலஇசைவாணி, இராயேஸ்வரி, காலஞ்சென்ற இராசவல்லவன் மற்றும் கமலேஸ்வரி, அன்னலட்சுமி, சரஸ்வதி, சறோஜினிதேவி, ருக்மணிதேவி, தவமணிதேவி, பாலதேவன் ஆகியோரின் மாமியாரும் ரவிசங்கர் (லண்டன்), காலஞ்சென்ற சிவசங்கர் மற்றும் மைதிலி, ரமேஸ், கிருபா, அரவிந், ஆரணி, தயாளினி, செந்தூரன், கௌதமி, குகன் ஆகியோரின் பேர்த்தியும் சகில், லிருத்திக்கா, தபுஜா, ராகுல் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10.03.2007 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் வட்டுக்கோட்டை கொத்தத்துறை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.சிவஞானச்செல்வம், வே.தில்லையம்பலம்
(பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்)
வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை.

## நவக்கிரி அருள்மிகு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்-2007

| | |
|---|---|
| 1) கொடியேற்றம் | - 14.03.2007 புதன்கிழமை 9.30 மணி |
| 2) வசந்த உற்சவம் | - 19.03.2007 திங்கட்கிழமை |
| 3) மாம்பழத் திருவிழா | - 20.03.2007 செவ்வாய்க்கிழமை |
| 4) வேட்டைத் திருவிழா | - 21.03.2007 புதன்கிழமை |
| 5) சப்பரத் திருவிழா | - 22.03.2007 வியாழக்கிழமை |
| 6) தேர்த் திருவிழா | - 23.03.2007 வெள்ளிக்கிழமை 10 மணி |
| 7) தீர்த்தத் திருவிழா | - 24.03.2007 சனிக்கிழமை 10 மணி |
| 8) பூங்காவனம் | - 25.03.2007 ஞாயிற்றுக்கிழமை |

- தேவஸ்தானம்.

(அ/52166)

அனுசரணை : அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
54, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

## 45 ஆம் நாள் நினைவு அஞ்சலி



அமரர்
### குருசாமி பரமேஸ்வரன்

(இயக்குநர் சபை உறுப்பினர், காரைநகர் ப.நோ.கூ. சங்கம், காரைநகர்)

தோற்றம் 25.10.1973
மறைவு 28.01.2007

ஊருக்கெல்லாம் சேவை செய்தாய்
உமக்கோ நாம் பாடை செய்தோம்
பாருக்குள் நல்லவர்க்கு
பாதிவழி விதியாச்சோ?

காரைநகர் ப.நோ.கூ. சங்கம்,
காரைநகர். (58721)

பணிப்பாளர் சபையினரும்
பணியாளர்களும்.

## 22ஆவது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 27 ★ 04 ★ 1971
உதிர்வு 13 ★ 03 ★ 1985

### செல்வன் துரைசிங்கம் சரவணன்துரை

(யா/அச்சுவேலி மத்திய கல்லூரி மாணவன்)

ஆண்டுகள் இருபத்திரண்டு ஆனாலும் மறக்கவில்லை.
காலமெல்லாம் உன் நினைவால் காத்திருக்க
சரவணன் அடியினை சரணமென நீ அடைந்தாய் !

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

திருச்செந்தூர்,
நாவலம்பதி, அச்சுவேலி.

அப்பா, அம்மா,
பெரியம்மா குடும்பத்தினர்.

(அ/5281)

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 20 ★ 12 ★ 1935
உதிர்வு 07 ★ 03 ★ 2002

### அமரர் சின்னத்தம்பி பாலசுந்தரம்

திதி : நவமி

நேற்றைய நிலவு போல் எம் வாழ்வில்
எண்ணங்களை விதைத்த அப்பாவே!
உற்றவரோடும் மற்றவரோடும்
உள்ளம் கலந்து உறவாடி உலகிலெமை
உயரத்திலேற்றி வைத்த அப்பாவே!
மறுபடியும் எம் வாழ்வில் வசந்தம் வீச வந்திடுவீர்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சங்கம் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி. (அ/52166)

குடும்பத்தினர்.
(கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

# இந்தியா! நீயுமா?

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் நாலாவது கூட்டத்தொடர் நேற்று ஜெனிவாவில் ஆரம்பமானது.

இலங்கை உட்பட முக்கிய பல நாடுகளில் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான நிலைவரத்தை ஆராயும் முக்கிய சர்வதேசக் கூட்டமாக இது அமைகின்றது. இந்த மாத முடிவு வரை இந்தத் தொடர் நீடிக்கின்றது.

சட்டத்துக்கு முரணான வகையிலும் சட்ட விரோதமாகவும் இடம்பெறும் படுகொலைகள் தொடர்பான ஐ. நாவின் விசேட அறிக்கையாளர் பிலிப் அல்ஸ்ரன், யுத்தப் பிணக்குகளின் மத்தியில் சிக்கியுள்ள சிறுவர்களின் விவகாரத்தைக்கையாளும் ஐ. நாவின் விசேட பிரதிநிதி ராதிகா குமாரசுவாமி, மனித உரிமைகள் ஆணையாளர் லூஸி ஆர்பர் உட்பட மனித உரிமைகள் தொடர்பான சர்வதேசப் பிரதிநிதிகள் இலங்கை உட்பட பல நாடுகளில் மனித உரிமைகள் பேணப்படும் நிலைமை சம்பந்தமாக சமர்ப்பிக்கும் அறிக்கைகள் இந்தக் கூட்டத் தொடரில் முக்கிய இடம் பிடிக்கவிருக்கின்றன.

இலங்கையில் மிக மோசமாக அதிகரித்துவரும் மனிதஉரிமை மீறல்கள், ஆட்கடத்தல்கள், கப்பம் கேட்டு மிரட்டுதல், படுகொலைகள் ஆகியவை தொடர்பான சர்வதேச சிரத்தை உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் இச்சமயத்தில் இலங்கை விடயம் இந்தக் கூட்டத்தொடரில் பிரதான இடம்பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில் அரசுப்படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மனிதஉரிமை மீறல்கள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன. அரசுப்படைகளுக்கு அவற்றில் நேரடி சம்பந்தம் உண்டு, அதற்கு அரசுத் தலைமையும் ஆதரவும், அங்கீகாரமும், இணக்கமும், உடன்பாடும் அளித்துள்ளது, என்றெல்லாம் குற்றச்சாட்டுகள் சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ள பின்னணியில், இந்தக் கூட்டத்தொடரில் நிலைமை இலங்கை அரசுக்குப் பாதிப்பானதாக - பாதகமானதாக - போகக்கூடிய வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஐ. நா. மனித உரிமைக் கவுன்ஸிலின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக எழக்கூடிய - சர்வதேச மட்டத்திலான - குற்றச்சாட்டுகள், கண்டனம், எதிர்ப்பு, அதிருப்தி ஆகியவற்றை எதிர்கொண்டு சமாளிக்கும் வகையில் இலங்கை அரசு மனித உரிமைகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்கவை சகல ஆயுத்தங்களோடும், உதவியாளர்களோடும் ஜெனிவாவுக்கு அனுப்புகிறது.

இராஜதந்திர வட்டாரங்களில் அதிக தொடர்பாடலும், செல்வாக்கும் உள்ள அமைச்சர் சமரசிங்க, அந்தத் தகைமையை வைத்துக்கொண்டு ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக வீசக்கூடிய மனிதஉரிமை மீறல் புயலை சமாளித்து விடுவார் என கொழும்பு நம்புகின்றது.

இதேசமயம் இலங்கையில் மோசமாக இடம்பெறும் மனித உரிமை மீறல்களுக்காக இலங்கை அரசைப் பொறுப்பாக்கிக் கண்டிக்கும் விதத்திலான பிரேரணை ஒன்றை இந்தக் கவுன்ஸிலின் அமர்வுக்குக் கொண்டுவருவதில் இருபத்தியைந்து நாடுகள் அடங்கியுள்ள ஐரோப்பிய ஒன்றியம் தீவிரமாக இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ஏற்கனவே ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் முன்னைய அமர்வுகளின் போதும் இத்தகைய பிரேரணை ஒன்றை அங்கு நிறைவேற்றச் செய்வதற்கான முஸ்தீபுகளில் ஐரோப்பிய ஒன்றியம் ஈடுபட்டதாயினும், அப்போதைய நிலைமைகருதி அது அச்சமயம் பிற்போடப்பட்டது.

இந்தத் தடவையும் அந்த முயற்சியை முன்னரிலேயே கிள்ளிவிடவோ அல்லது தள்ளிப்போடச் செய்யவோ தன்னால் இயன்ற சகல முயற்சிகளையும் கொழும்பு அரசு எடுத்திருக்கின்றது.

மனித உரிமை மீறல் நிலைமை தொடர்பாக கொழும்பு அரசுக்கு எதிரான பிரேரணை ஏதும் இந்த அமர்வுக்குக் கொண்டுவரப்படுவதையும், நிறைவேற்றப்படுவதையும் தடுக்கும் நோக்கில் - அவ்வாறு தடுக்கும் முயற்சிக்கு ஆதரவு திரட்டும் வகையில் - ஆசிய மற்றும் ஆபிரிக்க நாடுகள் மத்தியில் தனது இராஜதந்திரத் தொடர்பாடலையும் பிரசாரங்களையும் செல்வாக்கையும் கொழும்பு தீவிரப்படுத்தியிருப்பதாகவும் தெரிகின்றது.

ஏற்கனவே இலங்கை போன்று, இனப்பிரச்சினைகளை எதிர்நோக்கி, அதையொட்டி மோசமான மனித உரிமை மீறல்களுக்காக சர்வதேசக் கண்டனத்துக்கு இலக்காகியிருக்கும் ஏனைய நாடுகளின் - தன்னைப் போன்ற அதே மோசமான நிலையில் இருக்கும் தேசங்களின் - ஆதரவை வளைத்துப் போடுவதன் மூலம் தனக்கு எதிரான கண்டனப் பிரேரணை முயற்சியைத் தோற்கடிக்கலாம் என இலங்கை கருதுகிறது.

அதேசமயம், இன்றைய நிலைமையில் இத்தகைய பிரேரணை ஒன்று இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படுவதைத் தடுக்கும் செயற்பாட்டுக்கு அமெரிக்காவும், இந்தியாவும் கூட ஆதரவு வழங்கவுள்ளன என்ற தகவல், இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களினால் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கும் ஈழத் தமிழர்களை அதிர்ச்சிக்குள்ளும் கவலைக்குள்ளும் ஆழ்த்தியிருக்கின்றது.

இது விடயத்தில், தனது சர்வதேச ஆதிக்கச் செல்வாக்குக் கருதி, அநீதிப் பக்கம் சாயும் வகையில் அமெரிக்கா நடந்துகொள்வது இலங்கைத் தமிழர்களுக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. அது எதிர்பார்க்கப்பட்ட வழமையான அமெரிக்கப் போக்குத்தான். மத்திய கிழக்குப் பிரச்சினையில் பாதிக்கப்பட்ட பாலஸ்தீன மக்களுக்கு எதிராக - ஸியோனிஸ இஸ்ரேலுக்கு ஆதரவாக - நீதியை மிதித்தே அமெரிக்கா செயற்பட்டு வந்திருக்கின்றது, வருகின்றது. இந்த விடயத்திலும் கூட அது அப்படியே செயற்படுவது ஆச்சரியப்படத்தக்கதல்ல.

ஆனால், ஈழத் தமிழரோடு தொப்புள்கொடி உறவு கொண்ட தமிழகத் தமிழர்களையும் ஏனைய இந்திய மக்களோடு சேர்த்துப் பிரதிநிதித்துவப் படுத்தும் இந்திய அரசு -

இலங்கை விடயத்தில் வடக்கு - கிழக்கு இணைப்பு முதல் சகல விடயங்களிலும் புதுடில்லி நிர்வாகத்தின் கருத்தையும் நிலைப்பாட்டையும் புறமொதுக்கி, ஏமாற்றி, திமிர்த்தனத்தோடு நடந்துகொள்ளும் கொழும்பு நிர்வாகத்தால் அதிருப்தியுற்றிருக்கும் இந்தியா -

கொழும்பு நிர்வாகத்தின் மிக மோசமான மனித உரிமைகள் மீறல் போக்கைக் கண்டிக்கவும், தண்டிக்கவும், அம்பலப்படுத்தவும், தடுத்து நிறுத்தவும் வாய்ப்பளிக்கும் சர்வதேச ரீதியிலான ஒரு செயற்பாட்டை முட்டுக்கட்டைபோட்டு, இடைஞ்சல் செய்து, தடுத்து அதன்மூலம் மனிதஉரிமை மீறல் போக்குக்கு அங்கீகாரம் அளித்து ஆதரவு வழங்கப் போகின்றது என்பது ஈழத்தமிழர்களைப் பெரும் விசனமடைய வைத்துள்ளது.

''இந்தியா நீயுமா?'' (You too India?)என்று வேதனையுடன் கேள்வி எழுப்புகிறார்கள் தமிழர்கள். அதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை!

# தமிழக மீனவர்கள் இன்றும் போராட்டம்

## 15 ஆயிரம் பேர் நேற்று தொழில் நிறுத்தம்; 2 கோடி ரூபா நஷ்டம்

இராமேஸ்வரம், மார்ச் 13

இலங்கைக் கடற்படையினரின் தொடர்ச்சியான தாக்குதல்களைக் கண்டித்து - தி.மு.க. அரசின் அறிவிப்பின்படி - மீனவர்கள் நேற்று முழுமையான வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்த வேலைநிறுத்தம் இன்றும் தொடரும் என மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராமேஸ்வரம், பாம்பன், தங்கச்சிமடம், மண்டபம் போன்ற பகுதி களைச் சேர்ந்த மீனவர்கள் நேற்று முதல் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லாமல் தொழில் நிறுத்த போராட் டத்தை தொடங்கியுள்ளனர். இன்றும் இந்தப் போராட்டம் நீடிக்கும் என்று அவர்கள் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஆயிரம் படகுகளும் மீன்பிடிக்கச் செல்லாமல் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டன. சுமார் 15 ஆயிரம் மீனவர்கள் நேற்று மீன்பிடிக்கச் செல்லவில்லை.இதனால் நேற்று மட்டும் 2 கோடி ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

இராமநாதபுரம் தொகுதி காங்கிரஸ் எம்.எல்.ஏயான ஹசன் அலி தலைமையில் இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பாம்பன் தேசிய நெடுஞ்சாலை பஸ் நிறுத்தம் அருகில் உண்ணாவிரத போராட்டமும் நடை பெறுகிறது. அத்துடன் இராமநாதபுரம் தொகுதி முழுவதும் முழு அடைப்புப் போராட்டம் நடத்தவும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# மீனவர் மீதான தாக்குதலை கண்டித்து தி.மு.க.பேரணி

சென்னை, மார்ச்.13

இந்தியக் கடல் எல்லையில் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்படுவதைக் கண்டித்து ஆளுங் கட்சியான தி.மு.கவினர் நேற்றுச் சென்னையில் மாபெரும் கண்டனப்பேரணியை நடத்தினர்.

முற்பகல் 10.30மணியளவில் ஆரம்பமான பேரணியில் அமைச்சர் கே.பி.பி.சாமி தலைமையில் ஏனைய அமைச்சர்கள் ஆர்க்காடு வீரசாமி, மு.க.ஸ்டாலின், துரை முருகன், பரிதி இளம்வழுதி, கே.என்நேரு உட்பட ஆயிரக் கணக்கானோர் கலந்துகொண்டனர்.

''எச்சரிக்கை, எச்சரிக்கை, இலங்கை அரசுக்கு எச்சரிக்கை'', ''இனவெறிச் சிங்கள அரசே தமிழக மீனவர்களைக் கொல்லாதே'' என்ற கோசங்களைப் பேரணியினர் எழுப்பினர்.

''இலங்கை அரசே எல்லை மீறும் இனப்படுகொலையைக் கைவிடு'' என்ற சுலோகங்கள் அடங்கிய பதாகைகளும் பேரணியில் எடுத்துச் செல்லப்பட்டன.

இலங்கை இராணுவத்தினர் போல் உடையணிந்து துப்பாக்கி ஏந்திய வீரர்கள், படகில் உள்ள மீனவர்களைச் சுடுவது போன்ற காட்சிகளை நடித்தபடி தி.மு.க தொண்டர்கள் ஒரு படகில் வந்தனர்.

பேரணி முடிவில் அமைச்சர் குழு, டி.டி.கே சாலையில் அமைந்துள்ள இலங்கைத் துணைத்தூதர் அலுவலகத்தில் மனு ஒன்றைக் கையளித்தது.

மீனவர்கள் மீதான தாக்குதல் நிறுத்தப்படாவிட்டால் சர்வதேச மனித உரிமை அமைப்புக்கு இந்த விடயத்தைக் கொண்டு செல்லவுள்ளதாக என்று மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. (அ-1)

# சாவகச்சேரியில் இருவர்மீது சூடு

யாழ்ப்பாணம்,மார்ச்13

சாவகச்சேரி,டச்சுவீதியில் நேற்று மாலை 6.30 மணிக்கு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயம் அடைந்தனர்.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த கே.ஜெயக்குமார் (வயது 32), என்.ஈஸ்வரநாதன் (வயது 42) ஆகியோரே காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இவர்களை இனந்தெரியாதவர்கள் மறித்து அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் எனக் கூறப்பட்டது. (அ-1-78)

# மனோகராச் சந்தியில் வீட்டில் திடீர் தீ!

யாழ்.மனோகராச்சந்திக்கு அருகில் உள்ள வீடு ஒன்று நேற்றுப் பிற்பகல் திடீரெனத் தீப்பற்றிக் கொண்டது.

அப்போது அந்த வீட்டுக்குள் சிக்கிய இந்திரன் டனிசிக்கா (வயது 4) என்ற சிறுமியை வீதியில் பணியில் ஈடுபட்டிருந்த சிப்பாய்கள் காப்பாற்றினர். (அ-1)

குடாநாட்டின் படிச் செய்திகள் யாழ்ப்பாணம்

# வண்ணை சிவன் கோயில் பெருந்திருவிழா ஆரம்பம்

வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமிகள் ஆலய வியவருட பெருந்திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 19 தினங்கள் நடைபெறவுள்ளது.

நாளை காலையில் 9 மணிக்குப் பூசை வழிபாடுகள் ஆரம்பமாகிக் கொடியேற்றம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி தேர்த் திருவிழா இடம்பெறவுள்ளது.காலை 8 மணிக்கு பூசை இடம்பெற்று 9 மணிக்கு பஞ்சரத பவனி இடம்பெறும். பிற்பகல் ஒரு மணிக்கு தேரில் இருந்து சுவாமி இறங்கி வசந்த மண்டபத்திற்கு செல்வார்.மறுநாள் முதலாம் திகதி தீர்த்தத் திருவிழா இடம்பெறும். (அ-203)

# நடைபாதை வியாபாரி நகரில் சுட்டுக்கொலை

யாழ்.போதனா வைத்திய சாலைக்கு முன்பாக நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த இளைஞன் ஒருவர் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.நவாலியைச் சேர்ந்த லோறன்ஸ் மரியசெல்வம் (வயது - 37) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-1-78-203)

# உலகக் கிண்ண கிரிக்கெட் இன்று ஆரம்பமாகிறது

உலகெங்கும் கிரிக்கெட் ரசிகர்களை உற்சாகத்தில் ஆழ்த்தியிருக்கும் உலகக் கிண்ணப்போட்டி இன்று மேற்கிந்தியத் தீவுகளில் ஆரம்பமாகின்றது.

பதினாறு நாடுகள் பங்குபற்றும் இச்சுற்றுப்போட்டி அடுத்தமாதம் 28ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.உலகெங்கும் இருந்து பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் ஆட்டங்களைப் பார்க்க மேற்கிந்தியத் தீவில் கூடியுள்ளனர். ஆரம்ப வைபவம் நேற்று இடம்பெற்றது. (1)

# மட்டக்களப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களின் உடனடித் தேவைகளுக்காக நூறு மெற்றிக்தொன் அரிசியும், பருப்பு, சீனி, பால்மா போன்ற உணவுப் பொருள்களும் நேற்று அனுப்பி வைக் கப்பட்டுள்ளன. அவற்றுடன் மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்கு 50 லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த சில தினங்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களின் மீது அரசபடையினர் தொடர்ச்சியாக பீரங்கி மற்றும் ஆட்லறித் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

புலிகளின் முகாம்கள் மீதே தாக்குதல் நடத்துவதாக அரச படையினர் கூறுகின்றனர்.

ஆனால் வெல்லாவெளி, கிரான், உன்னிச்சை, படுவான்கரை , பட்டிப்பளை, வவுணதீவு, ஏறாவூர் பற்று ஆகிய பிரதேசங்களில் இருந்து ஒன்றரை லட்சத்திற்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்து வந்துள்ளனர்.

தமது குடியிருப்புகள் மீது குண்டுகள் வந்து விழுவதாகவும் தாம் வீடு வாசல்களை இழந்து இடம்பெயர்ந்துள்ளோம், குடும்பத்தோர் பலரைக் காணவில்லை. இப்போது அகதிகளாக்கப்பட்டுள்ளோம் என்று இடம் பெயர்ந்து வந்தவர்கள் கூறுகின்றனர்.

ஒரே நேரத்தில் இவ்வளவு பெரும் எண்ணிக்கையானோர் இடம்பெயர்ந்து வந்துள்ளதால் அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை வழங்குவதில் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் அருமைநாயகம் தெரிவித்துள்ளார். (அ-ஐ)

# பத்திரிகை அச்சுத்தாள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாலசுந்தரம்பிள்ளை, செயலாளர் எஸ்.பரமநாதன் உட்பட மதப்பிரமுகர்கள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் இக்கலந்துரையாடலில் பங்குகொண்டனர்.

பத்திரிகை அச்சுத்தாள் கிடையாமை தொடர்பாக கொழும்பில் உள்ள அரச உயர் மட்டங்களுக்கு எடுத்து விளக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் அங்கு தெரிவித்தார்.

குடாநாட்டில் தொழில் இழந்துள்ளவர்களுக்கும், கடற்றொழிலாளர்களுக்கும் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த மாதாந்தம் உதவித் தொகை வழங்க வேண்டும் என்றும் பிரதிநிதிகள் அரச அதிபரிடம் கேட்டுக்கொண்டனர்.

மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கும்படியும் கோரினர்.

**கடத்தல், காணாமற்போதல்**

காணாமற்போதல், கடத்தல் ஆகியவற்றால் மக்கள் மத்தியில் உருவாகியுள்ள பீதியைப் போக்க அரசு உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதன் பொருட்டு சம்பந்தப்பட்டவர்களிடம் இவை தொடர்பாக அரச அதிபர் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கவேண்டும் என்று கோரப்பட்டது. மக்கள் எதிர்நோக்கும் ஏனைய பல பிரச்சினைகளையும் மக்கள் குழுவினர் அரச அதிபருக்கு விளக்கிக்கூறினர்.

# மகஸின் சிறை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளும் எனத் தெரிவிக்கப்படுகின் றது.

நீதி அமைச்சர் டிலான்பெரேரா வெளிநாடு சென்றிருப்பதால் கைதிகளின் பிரச்சினை குறித்து அவருடன் உரையாடி, மேல் நட வடிக்கை எடுக்க முடியாமல் இருப்பதாகவும் -

அவர் நாடு திரும்பியதும் கைதிகள் பிரச்சினை குறித்து அவ ருடன் பேசி ஒரு முடி வைப் பெற் றுத்தருவதாகவும்-

தமிழ்க் கூட்டமைப்பு எம். பிக்கள் மேற்படி தமிழ்க் கைதிகளி டம் தெரிவித்திருந் தனர்.எனினும், அவர்கள் நேற்றும் தொடர்ந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.இந்த உண்ணாவிரதத்தில், கடந்த ஒகஸ்ட் மாதம் 18ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் கைதுசெய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர் சிவராசா பகீரதனும் பங்கேற்கிறார். (அ)

# குடாநாட்டில் அத்தியாவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கப்பட்ட பிரச்சினைகளும் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளும் வருமாறு:-

✱ குடாநாட்டில் பாண் உற்பத்தியை மேற்கொள்வதற்குத் தேவையான கோதுமை மாவை கப்பல் மூலம் தொடர்ந்து எடுத்துவர ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

✱ சித்திரை வருடப்பிறப்புக்குத் தேவையான பொருள்களை குடாநாட்டுக்கு கப்பல் மூலம் எடுத்துவருவதற்குரிய நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

✱ குடாநாட்டின் பல பிரதேசங்களில் இப்போது வரும் மின்வெட்டை கூடிய விரைவில் நீக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

**நோயாளருக்கான மருந்து வகைகள்**

குடாநாட்டு நோயாளர்களுக்கு ஒவ்வொரு மாதமும் தேவைப்படும் மருந்துகளை இனங்கண்டு அவற்றை ஒரு சீரான முறையில் இங்கு எடுத்துவருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

தனியார் வர்த்தகர்களால் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ள மருந்துகள் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள விலைக்கே விற்பனை செய்யப்படவுள்ளதாக மாகாணச் சுகாதாரசேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளர்கள் வாரத்தில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விமானத்தில் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

**பெற்றோல் விநியோகம்**

மண்ணெண்ணை, டீசல் ஆகியவற்றுக்கு நிலவிய தட்டுப்பாடு ஓரளவு நீங்கியுள்ளது. அதே போன்று பெற்றோல் விநியோகத்தையும் சீராக்குவது என இங்கு முடிவு செய்யப்பட்டது. காங்கேசன் துறையில் உள்ள எரிபொருள் தாங்கிகளின் கொள்வனவு தற்போது அதிகரிக்கப்பட்டு வருவதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்தார்.

**பாட நூல்கள், சீருடைகள்**

✱ குடாநாட்டின் பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான பாடநூல்கள், சீருடைகள் என்பன எடுத்துவரப்படவேண்டியுள்ளதால் அதற்குரிய ஏற்பாடுகளை கல்வித்திணைக்களம் மேற்கொள்ளவேண்டும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

**தெற்குக்கு குடாநாட்டு உற்பத்திகள்**

✱ யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம், புகையிலை ஆகியன கப்பல் மூலம் தென்பகுதிக்கு தொடர்ந்து எடுத்துச் செல்லப்படுவதாக அரச அதிபர் தெரிவித்தார்.

✱ குடாநாட்டுக்கான தபால் சேவைகள் தற்போது ஓரளவு சீர் செய்யப்பட்டுள்ளதாகத் தபால் திணைக் கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குடாநாட்டில் உள்ள வங்கிகளின் சேவை நேரங்களை நீடிப்பது தொடர்பாக உரியவர்களுடன் பேச்சு நடத்துவது என்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

✱ குடாநாட்டுப் பத்திரிகைகளுக்கான அச்சுத்தாள்கள் எடுத்துவர அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை தொடர்பாக பொது அமைப் புக்களின் பிரதிநிதிகள் இந்தக்கூட்டத்தில் பிரஸ்தாபித்துள்ளனர். இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தாம் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக அரச அதிபர் கூறினார்.

✱ குடாநாட்டில் உள்ள அரச திணைக்களங்கள், நிறுவனங்கள் ஆகியன தமக்கு மிக அவசரமாகத் தேவைப்படும் பொருள் கள் தொடர்பான விவரங்களை முன்கூட் டியே சமர்ப்பித்தால் அவற்றைக் கப்பல் மூலம் எடுத்துவருவதற்கான உதவிகளை யாழ்.செயலகம் செய்து கொடுக்கும். (அ-8)

# கடத்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாக அனுப்பி வைக்கவும்,

யாழ். குடாநாட்டில் கடத்தல் சம்பவங்கள் நடைபெறும்போது உடனடியாக 0212285949 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அல்லது 0112778496 என்ற 'பக்ஸ்' இலக் கத்துக்கு அறிவித்தால் கடத்தலை முறிய டிப்பதற்கு அல்லது கடத்தல்காரர்களையும் கடத்தப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதற்கும் எம்மாலான ஆக்கபூர்வமான முயற்சிகளைச் செய்யமுடியும்.

காணாமற்போனோர், படுகொலை செய்யப்பட்டோர் தொடர்பான முறைப் பாடுகளை செய்வோர் பூர்த்தி செய்து தபால் மூலமாகவோ பக்ஸ் மூலமாகவோ தாமத மின்றி இம்முகவரிகளில் ஒன்றுக்கு அனுப்பி வைக்கலாம் - என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. (அ)

# வடக்கு - கிழக்கை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'தின் முக்கிய அம்சங்கள் வருமாறு.

✱ வடக்கு - கிழக்கு மாகாணங்கள் மீண்டும் இணைக்கப்பட்டு ஒரு பிராந்திய சபையாகவும் அதில் முஸ்லிம்களுக்கான உப பிராந்திய சபையும் அமைக்கப்பட வேண்டும்.

✱ மத்திய மாகாணத்துடன், சப்ரகமுவ மாகாணமும் பதுளை மாவட்டமும் சேர்க்கப்பட்டு தனியான பிராந்தியத்தை உருவாக்கி அதில் மலையகத் தமிழ் மக்களுக்கென தனியான உப பிராந்திய சபை வேண்டும்.

✱ தென் மாகாணத்துடன் மொனராகலை மாவட்டம் இணைக்கப்பட்டு ஒரு அலகாக அங்கிகரிக்கப்பட வேண்டும்.

✱ மேல்மாகாணம் தனியான ஒரு பிராந்தியமாக அமைய வேண்டும்.

✱ வடமேல் மாகாணமும் வட மத்திய மாகாணமும் இணைக்கப்பட்டு தனியான ஒரு பிராந்திய சபை உருவாக்கப்பட வேண்டும். (அ)

## நாளை

மாசி - 30
புதன்கிழமை
14.03.2007
திதி: தசமி
பி.ப : 05.15
நட்சத்திரம்: பூராடம்
நண்பகல் : 12.00
சுபநேரம் : 04.51 - 06.21
ராகுகாலம் : 12.21 - 01.51

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க முன்னாள் பொதுமுகாமையாளர்

**சிவஸ்ரீ மார்க்கண்டு ஐயர் சோமசுந்தர ஐயர்**

11.03.2007 அன்று சிவபதமடைந்தார். அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் செலுத்துகிறோம். அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், பணிப்பாளர் சபை, பணியாளர்கள்
பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கம். (சி/52192)

---

"கல்லூரி அன்னையின் தவப்புதல்வியே இதயம் நெகிழ்ந்து தலை வணங்குகின்றோம்"



*அமரர்*

**சரஸ்வதி கனகரத்தினம்**
(B.A. Dip.in Edu. SLTS I)
(ஓய்வு பெற்ற பிரதி அதிபரும், பழைய மாணவியும் - யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

"கல்லூரித் தாயின் மூத்த புதல்வியே - எமது
இதயத்தில் இருத்தினோம் தங்கள் சேவையை
மங்காப் புகழ் பெற்ற எங்கள் சரஸ்வதி கனகரத்தினமே!
தங்கள் நாமம் என்றும் ஒலிக்கும்"

*நலன்புரிக்கழகம், பழைய மாணவர் சங்கம்,*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.*
**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.**
(58783)

---

## மரண அறிவித்தல்கள்

### பிரம்மஸ்ரீ மா.சோமசுந்தர ஐயர்

(முன்னாள் பொது முகாமையாளர்-ப.நோ.கூ.சங்கம், பருத்தித்துறை)

பிரம்மஸ்ரீ மா.சோமசுந்தர ஐயர் நேற்று (12.03.2007) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரம்மஸ்ரீ சோ.மார்க்கண்டு ஐயர்-இராசம்மா தம்பதியரின் பாசமிகு ஜெஸ்ர புத்திரனும் மகேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவரும் பிரம்மஸ்ரீ பிரசாந் சர்மாவின் அன்புத் தந்தையும் இராசரத்தினம்மா, நித்தியானந்தரட்ண சர்மா, குகனேஸ்வர சர்மா, விஜயலட்சுமி அம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் பிரம்மஸ்ரீ பாலசுப்பிரமணிய ஐயர், இராசலட்சுமி அம்மா, தாரணி அம்மா, தியாகராஜசர்மா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (13.03.2007) செவ்வாய்க்கிழமை மு.ப.9 மணியளவில் நடைபெற்று, வேலூண்டை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*துன்னாலை,* *தகவல்:*
*கரவெட்டி.* (58766) **குடும்பத்தினர்.**

### நரசிங்கம் கிருஷ்ணபிள்ளை



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நரசிங்கம் கிருஷ்ணபிள்ளை நேற்று (12.03.2007) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அன்னலஷ்மியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான லட்சுமி, கந்தையா, பொன்னம்பலம் மற்றும் பார்வதி மற்றும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம், சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் மோகனின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் தனேந்திரன் (கனடா), வரதராஜன் (தபால் அதிபர்-கொழும்பு), சுசீந்திரன் (மாலைதீவு), திலகாம்பிகை, அமிர்தாம்பிகை, தயாபரன் (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையும் ஞானகலாதேவி (கனடா), ரீட்டா (கொழும்பு), தங்கராஜா ( யாழ்ப்பாணக் கல்லூரி), உருத்திரன் (மாலைதீவு), டொறின் (கனடா), லோஜினி ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.03.2007) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணியளவில் அவரின் மகனது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*302, கோயில் வீதி,* *தகவல்:*
*நல்லூர்.* (58767) **மோகன்** *(மகன்)*

### வைத்தி லூக்காஸ்



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தி லூக்காஸ் நேற்று (12.03.2007)திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மேரி மாக்கிரெட்டின் கணவரும் L.F. மனோகரன் (ஆசிரியர், யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.வி), ஜெராட் சுவேந்திரநாதன் (ஜேர்மனி), வனஜா (ஜேர்மனி), செல்வநாயகி (யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க.வி) ஆகியோரின் தந்தையும் யசிந்தா, ஜோண் விஜேந்திரன், எட்வின் பீரிஸ் ஆகியோரின் மாமனும் றொஷானி, றொஷாந்தன், அன்ரோ, சியாம், பிரவீன், சுகிர்தனன், தர்ஷனன், மிதுர்ஷனன், கீர்த்தனா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (13.03.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*புனி.அந்தோனியார் வீதி,* (58752) *தகவல்:*
*பண்டத்தரிப்பு.* **அ.எ.பீரிஸ்.**

---

## வடமராட்சியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக, கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

★ அரச துறையினர் பணிபுரிவதில் எவ்வித கஷ்டமும் இருப்பதாகத் தெரியவில்லை. போர்க்காலச் சூழல் என சாக்குப் போக்குக் கூறி தப்பித்துக் கொள்ள முயலக்கூடாது. ஒவ் வொருவருக்கும் தமக்கென கடமைகள் உண்டு என்பதனை உணர்ந்து செயற்படவேண்டும்.

★ வடமராட்சியில் மக்கள் சேவைக்குரிய செயற்பாடுகளைத் தங்கு தடையின்றி முன்னெடுக்க எந்த வித பிரச்சினையும் இல்லை. நீதிமன்ற குற்றப் பணம் மூலம் கிடைக்கும் நிதி மூன்று பிரதேசசபைகளுக்கும் வழங்கப்படுகின்றன. ஏற்கனவே 66 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. அந்த நிதி பயன்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை.

★ அரச அதிபர் பெரும் சிரமங்களுக்கு மத் தியில் மக்களுக்குத் தேவையான பொருள்களைக் கொண்டுவருகின்றார். அந்தப் பொருள்கள் பொதுமக்களுக்குச் செல்வதற்குப் பதிலாகதனியார் கடைகளுக்கும் பொதுச் சந்தைகளுக்கும் போய்ச்சேருவதாக நீதிமன்றுக்கு முறைப்பாடுகள் கிடைக்கின்றன. உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம் தவிர்ந்த ஏனைய சங்கங்கள் குறித்து முறைப்பாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளன.

★ மக்களின் தேவைக்குப் போதியளவான சீனி கிடைப்பதில்லை. ஆனால் கசிப்புக் காய்ச்சுவதற்கு சீனி தாராளமாகக் கிடைக்கின்றது. சங்கக் கிளைகளுக்கு சங்கங்களில் இருந்து எடுத்துச் செல்லப்படும் பொருள்கள் இடைநடுவில் தனியார் கடைகளுக்கு பரிமாறப்படுவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

★ பொதுமக்களுக்கு அடிக்கடி மின்தடை ஏற்படுகின்றது. ஆனால் பிரதான வீதிகள் மற்றும் ஒழுங்கைகளில் சட்டவிரோத மின் பாவனை சாதாரணமாக மேற்கொள்ளப்படுகின்றது. இதன் காரணமாக மின் பாவனையாளர்களும், மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

★ வீதிகளிலும், சந்தைகளிலும், வைத்தியசாலைகளிலும், பொது இடங்களிலும் கட்டாக்காலி நாய்கள் தாராளமாகத் திரிகின்றன. அவற்றை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை.

★ பிரதான வீதிகள், ஒழுங்கைகளில் சட்டவிரோதமாக கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. இதனை அரச அதிகாரிகள் கண்டும் காணாமல் இருக்கின்றனர்.

★ சட்டவிரோதமாக தொழிற்சாலைகள் பல இயங்க ஆரம்பித்துள்ளன. அவற்றைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ கிராமசேவையாளர்கள் பொதுமக்களுடன் மதிப்பற்ற முறையில் நடந்து கொள்வதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளும்.

பொதுமக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபடும் அரச அதிகாரிகளுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்கு உறுதுணைபுரிபவர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

(அ-1-155)

## மட்டக்களப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிஷ் தூதரை சந்தித்து இக்கோரிக்கையை நேரில் விடுத்தனர்.

இடம்பெயர்ந்த மக்களின் அவலநிலை, அவர்கள் அடிப்படை வசதிகள் இன்றிப் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருவது பெண்கள், சிறுவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் ஆகியன தொடர்பாக கூட்டமைப்பினர் தூதருக்கு விரிவாக எடுத்துக்கூறினர். (அ-1-4)


**கார் விற்பனைக்கு**

**தனிப்பாவனையிலுள்ள புதிய நீல நிற INDIGO - GLX - TATA - KA XXXX தொடர் இலக்கக் கார் விற்பனைக்குண்டு**

**தொடர்பு: தொ.பே: 0777754559**

**வெளிநாடு செல்லவேண்டுமா?**

**வெளிநாடுகளில்**
**சகல துறைகளிலும் கல்வி கற்க,**
**வேலை வாய்ப்புப் பெற**
**ஆர்வமுடையோர்**
**தொடர்புகொள்ளவும்.**
**யாழ்ப்பாணத்திலிருந்து**
**கொழும்பு வருவதற்கான**
**ஒழுங்கு செய்து தரப்படும்.**
**வயது எல்லை இல்லை.**
**தொடர்பு : 0786146621**

(சி/52191)


## மரண அறிவித்தல்

### நவாலியூர் செபெல்டானோ லோறன்ஸ் மரியசெல்வம்

நவாலியூர் செபெல்டானோ லோறன்ஸ் மரியசெல்வம் நேற்று (12.03.2007) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற E.M ஜோசப், ஜெயசீனி - புனிதமலர் தம்பதியரின் அன்பு மகனும் அல்போன்ஸ், யூட், கமலம், பாக்கியம், றொஸ், பேனாட், கதறீன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஜெசிக்காவின் அன்புக்கணவருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் தொடர்பான விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

---

## ஓராண்டு நினைவுகள்



| மண்மகிழ | கண்நெகிழ |
|---|---|
| 10 | 22 |
| * | * |
| 02 | 02 |
| * | * |
| 1983 | 2006 |

**செல்வி பரமசிவம் சுகந்தினி**

ஓராண்டு கடந்தாலும் ஒளி மிகுந்த உன் வதனம்
ஒரு நாளும் எம்மை விட்டு நீங்காது
ஓயாது எங்கள் இதயத்தில் நீங்கா நினைவுடன் வாழ்கிறீர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை. (58765) **குடும்பத்தினர்.**

---

## OLD BOYS' ASSOCIATION ST.PATRICK'S COLLEGE, JAFFNA

### ST.PATRICK'S DAY - 17th MARCH 2007

**Programme : Triduum on 14th, 15th & 16th at 7.40 a.m at St.Mary's Cathedral - Jaffna**
**Festival mass on 17th March 2007 at 7.30 a.m at the College Chapel followed by felowship breakfast hosted by the College**
**Members of the O.B.A. are cordially invited to grace the occasion**
**O.B.A. get-together on the 17th Evening will not be held due to unavoidable circumstances.**

No.59, ST.Patrick's Road, Jaffna.

Gen.Secretary
O.B.A. - S.P.C. Jaffna

---

## நினைவஞ்சலி

**11ஆம் ஆண்டு** **31ஆம் நாள்**



*அமரர்* **மூத்தர் வீரகத்தி**

*திருமதி* **வீரகத்தி மாணிக்கம்**

கடந்த 11.02.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (13.03.2007) செவ்வாய்க்கிழமை மு.ப 9 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இல. 163, கே.கே.எஸ். வீதி,*
*கொக்குவில்.* (58753) **குடும்பத்தினர்.**

---

## கண்ணீர் அஞ்சலி

அளவெட்டி கிழக்கைச் சேர்ந்த யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ முதலாம் வருட மாணவி

**செல்வி மயூரா முருகையா**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமைத்துவ கற்கைகள், வணிகபீட மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.
(58756)

---

## 31ஆம் நாள் விழிநீர் அஞ்சலி



எனது நண்பனின் அன்பு மகன்

**பத்மகாந்தன் சஞ்ஜீத்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் 31ஆம் நாள் நினைவு நாளில் (இன்று) எமது அஞ்சலியினைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குணம் மாமா குடும்பம்.
(கஸ்தூரி).

சாவகச்சேரி. (58760)

---

## மரண அறிவித்தல்

### பரந்தாமன் பிருந்தாவன்

(சிரேஷ்ட நிதி உதவியாளர், பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் நல்லூர் கோவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பரந்தாமன் பிருந்தாவன் நேற்று (12.03.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*393/47, கோயில் வீதி.* *தகவல்:*
*நல்லூர்.* **மனைவி, மகள்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.03.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org